





श्रीमत् वेदान्त रामानुज मुनि करुणालब्ध वेदान्त युग्मम्
श्रीमत् श्रीवास योगीश्वर गुरुपदयोर्पित स्वात्मभारम्
श्रीमत् श्रीरङ्गनाताह्वय मुनिकृपया प्राप्त मोक्षाश्रमं तं
श्रीमत् वेदान्त रामनुज मुनिमपरम् संश्रये देशिकेन्द्रम्



श्रीमत् श्रीवास योगीश्वर मुनि करुणालब्ध वेदान्त युग्मम्
श्रीमत् वेदान्त रामानुज गुरुपदयोर्पित स्वात्मभारम्
श्रीमत् श्रुत्यन्त रामानुज यति नृपतेः प्राप्त मोक्षाश्रमं तं
श्रीमत् श्रीवास रामनुजमुनिं संश्रये ज्ञानवार्धिम्



वेदान्त लक्ष्मण मुनीन्द्र कृपात्त बोधम्
तत्पाद युग्म सरसीरुह भृङ्गराजम्
त्रय्यन्त युग्म कृतभूरि परिश्रमं तं
श्रीरङ्ग लक्ष्मणमुनिम् शरणं प्रपद्ये

# நாச்சியார் திருமொழி

*n-AchchiyAr thirumozhi*

# நாச்சியார் திருமொழி

## தனியன்

### ஸ்ரீ திருக்கண்ணமங்கையான்டான் அருளிச்செய்த

அல்லிநாள் தாமரைமேல் ஆரணங்கினின் துணைவி
மல்லி நாடாண்ட மடமயில்
மெல்லியலாள் ஆயர் குலவேந்தன் ஆகத்தாள்
தென்புதுவை வேயர் பயந்த விளக்கு

கோலச் சுரிசங்கை மாயன் செவ்வாயின் குணம் வினவும்
சீலத் தனள் தென் திருமல்லி நாடி செழுன்குழல் மேல்
மாலத் தொடை தென் அரங்கருக்கு ஈயும் மதிப்புடைய
சோலைக் கிளி அவள் தூய நல் பாதம் துணை நமக்கே

### ஸ்ரீ ஆண்டாள் அருளிச்செய்த

1 தையொரு திங்கள்
2 நாமம் ஆயிரம்
3 கோழி அழைப்பதன்
4 தெள்ளியார் பலர்
5 மன்னு பெரும்புகழ்
6 வாரணம் ஆயிரம்
7 கருப்பூரம் நாறுமோ
8 விண்ணீல மேலாப்பு
9 சிந்தூரச் செம்பொடி
10 கார்க்கோடல் பூக்காள்
11 தாம் உகக்கும்
12 மற்று இருந்தீர்
13 கண்ணன் என்னும்
14 பட்டி மேய்ந்து

# நாச்சியார் திருமொழி

## 1 தையொரு திங்கள்

*தை ஒரு திங்களும் தரைவிளக்கித்*
*தண் மண்டலம் இட்டு மாசி முன்னாள்*
*ஐய நுண் மணல் கொண்டு தெருவணிந்து*
*அழகினுக்கு அலங்கரித்த அன்ங்கதேவா*
*உய்யவும் ஆங்கொலோ என்று சொல்லி*
*உன்னையும் உம்பியையும் தொழுதேன்*
*வெய்யதோர் தழல் உமிழ் சக்கரக் கை*
*வேங்கட வற்கு என்னை விதிக்கிற்றியே* [1.1] [0504]

வெள்ளை நுண் மணல் கொண்டு தெருவணிந்து
வெள்வரைப் பதன் முன்னம் துறை படிந்து
முள்ளும் இல்லாச் சுள்ளி எரி மடுத்து
முயன்றுன்னை நோற்கின்றேன் காமதேவா
கள்ளவிழ் பூங்கணை தொடுத்துக் கொண்டு
கடல் வண்ணன் என்பதோர் பேர் எழுதி
புள்ளினை வாய் பிளந்தான் என்பதோர்
இலக்கினில் புக என்னை எய்கிற்றியே [1.2] [0505]

மத்த நன் நறுமலர் முருக்க மலர் கொண்டு
முப்போதும் உன்னடி வணங்கி
தத்துவம் இலி என்று நெஞ்செரிந்து
வாசகத்து அழித்து உன்னை வைதிடாமே
கொத்தலர் பூங்கணை தொடுத்துக் கொண்டு
கோவின்தன் என்பதோர் பேர் ஏழுதி
வித்தகன் வேங்கட வாணன் என்னும்
விளக்கினில் புக என்னை விதிக்கிற்றியே [1.3] [0506]

சுவரில் புராண நின் பேர் ஏழுதிச்
சுறவ நற் கொடிகளும் துரங்கங்களும்
கவரிப் பிணாக்களும் கருப்பு வில்லும்
காட்டித் தந்தேன் கன்டாய் காமதேவா
அவரைப் பிராயம் தொடங்கி என்றும்
ஆதரித்து எழுந்த என் தட முலைகள்
துவரைப் பிரானுக்கே சங்கற்பித்துத்
தொழுது வைத்தேன் ஒல்லை விதிக்கிற்றியே [1.4] [0507]

# நாச்சியார் திருமொழி

## 1 தையொரு திங்கள்

வானிடை வாழும் அவ்வானவர்க்கு
மறையவர் வேள்வியில் வகுத்த அவி
கானிடைத் திரிவதோர் நரி புகுந்து
கடப்பதும் மோப்பதும் செய்வதொப்ப
ஊனிடை ஆழி சங்கு உத்தமர்க்கு என்று
உன்னித்து எழுந்த என் தட முலைகள்
மானிடவர்க்கு என்று பேச்சுப் படில்
வாழகில்லேன் கண்டாய் மன்மதனே [1.5] [0508]

உருவுடையார் இளையார்கள் நல்லார்
ஓத்து வல்லார்களைக் கொண்டு
வைகல் தெருவிடை எதிர் கொண்டு
பங்குனி நாள் திருந்தவே நோற்கின்றேன் காமதேவா
கருவுடை முகில் வண்ணன் காயாவண்ணன்
கருவிளை போல் வண்ணன் கமல வண்ணத்
திருவுடை முகத்தினில் திருக் கண்களால்
திருந்தவே நோக்கு எனக்கு அருள் கண்டய் [1.6] [0509]

காயுடை நெல்லொடு கரும்பு அமைத்துக்
கட்டி அரிசி அவல் அமைத்து
வாயுடை மறையவர் மந்திரத்தால்
மன்மதனே உன்னை வணங்குகின்றேன்
தேசமுன் அளந்தவன் திரிவிக்கிரமன்
திருக்கைகளால் என்னைத் தீண்டும் வண்ணம்
சாயுடை வயிறும் என் தட முலையும்
தரணியில் தலைப்புகழ் தரக்கிற்றியே [1.7] [0510]

மாசுடை உடம்பொடு தலை உலறி
வாய்ப்புரம் வெளுத்தொரு போதும் உண்டு
தேசுடை திறல் உடைக் காமதேவா
நோற்கின்ற நோன்பினைக் குறிக்கொள் கண்டாய்
பேசுவது ஒன்று உண்டு இங்கு எம்பெருமான்
பெண்மையைத் தலை உடைத்தாக்கும் வண்ணம்
கேசவ நம்பியைக் கால் பிடிப்பாள் என்னும்
இப்பேறு எனக்கு அருள் கண்டாய் [1.8] [0511]

# நாச்சியார் திருமொழி

### 1 தையொரு திங்கள்

தொழுது முப்போதும் உன்னடி வணங்கி
        தூமலர் தூய்த் தொழுது ஏத்துகின்றேன்
பழுதின்றிப் பாற்கடல் வண்ணனுக்கே
        பணிசெய்து வாழப் பெறாவிடில் நான்
அழுதழுது அலமந்தம்மா வழங்க
        ஆற்றவும் அது உனக்கு உறைக்கும் கண்டாய்
உழுவதோர் எருத்தினை நுகங்கொடு பாய்ந்து
        ஊட்டமின் இன்றி துரந்தால் ஒக்குமே [1.9] [0512]

*கருப்புவில் மலர்க்கணைக் காமவேளைக்*
        *கழலிணை பணிந்து அங்கோர் கரி அலற*
*மருப்பினை ஒசித்துப் புள் வாய் பிளந்த*
        *மணிவண்ணற்கு என்னை வகுத்திடென்று*
*பொருப்பன்ன மாடம் பொலிந்து தோன்றும்*
        *புதுவையர் கோன் விட்டு சித்தன் கோதை*
*விருப்புடை இன்தமிழ் மாலை வல்லார்*
        *விண்ணவர் கோன் அடி நண்ணுவரே* [1.10] [0513]

# நாச்சியார் திருமொழி

## 2 நாமம் ஆயிரம்

*நாமம் ஆயிரம் ஏத்த நின்ற*
*நாராயணா நரனே*
*உன்னை மாமி தன் மகனாகப் பெற்றால்*
*எமக்கு வாதை தவிருமே*
*காமன் போதரு காலம் என்று*
*பங்குனி நாள் கடை பாரித்தோம்*
*தீமை செய்யும் சிரீதரா*
*எங்கள் சிற்றில் வந்து சிதையேலே* [2.1] [0514]

இன்று முற்றும் முதுகு நோவ
இருந்து இழைத்த இச்சிற்றிலை
நன்றும் கண்ணுற நோக்கி
நாம் கொளும் ஆர்வம் தன்னைத் தணிகிடாய்
அன்று பாலகன் ஆகி
ஆலிலை மேல் துயின்ற எம் ஆதியாய்
என்றும் உன்றனக்கு எங்கள் மேல்
இரக்கம் எழாதது எம் பாவமே [2.2] [0515]

குண்டு நீர் உறை கோளரீ
மதயானை கோள் விடுத்தாய்
உன்னைக் கன்டு மால் உறுவோங்களைக்
கடைக் கண்களால் இட்டு வாதியேல்
வண்டல் நுண் மணல் தெள்ளி
யாம் வளைக் கைகளால் சிரமப் பட்டோம்
தெண் திரைக்கடல் பள்ளியாய்
எங்கள் சிற்றில் வந்து சிதையேலே [2.3] [0516]

பெய்யு மா முகில் போல் வண்ணா
உன்றன் பேச்சும் செய்கையும்
எங்களை மையல் ஏற்றி மயக்க
உன் முகம் மாய மந்திரம் தான் கொலோ
நொய்யர் பிள்ளைகள் என்பதற்கு
உன்னை நோவ நாங்கள் உரைக்கிலோம்
செய்ய தாமரைக் கண்ணினாய்
எங்கள் சிற்றில் வந்து சிதையேலே [2.4] [0517]

# நாச்சியார் திருமொழி

### 2 நாமம் ஆயிரம்

வெள்ளை நுண் மணல் கொண்டு
சிற்றில் விசித்திரப் பட
வீதி வாய்த் தெள்ளி நாங்கள் இழைத்த கோலம்
அழித்தி யாகிலும் உன்றன் மேல்
உள்ளம் ஓடி உருகலல்லால்
உரோடம் ஒன்றும் இலோம் கண்டாய்
கள்ள மாதவா கேசவா
உன் முகத்தன கண்கள் அல்லவே [2.5] [0518]

முற்றிலாத பிள்ளைகளோம்
முலை போந்திலா தோமை
நாள்தொறும் சிற்றில் மேல் இட்டுக் கொண்டு
நீ சிறிதுண்டு திண்ணென நாம் அது கற்றிலோம்
கடலை அடைத்து அரக்கர் குலங்களை
முற்றவும் செற்று
இலங்கையைப் பூசல் ஆக்கிய சேவகா
எம்மை வாதியேல் [2.6] [0519]

பேத நங்கு அறிவார்களோடு
இவை பேசினால் பெரிதின் சுவை
யாதும் ஒன்று அறியாத பிள்ளைகளோமை
நீ நலிந்து என் பயன்
ஓத மா கடல் வண்ணா
உன் மணவாட்டி மாரொடு சூழறும்
சேது பந்தம் திருத்தினாய்
எங்கள் சிற்றில் வந்து சிதையேலே [2.7] [0520]

வட்ட வாய்ச் சிறு தூதையோடு
சிறுசுளகும் மணலும் கொண்டு
இட்டமா விளையாடு வோங்களைச்
சிற்றில் ஈடழித்து என் பயன்
தொட்டு உதித்து நலியேல் கண்டாய்
சுடர்ச் சக்கரம் கையில் ஏந்தினாய்
கட்டியும் கைத்தால் இன்னாமை
அறிதியே கடல் வண்ணனே [2.8] [0521]

# நாச்சியார் திருமொழி

## 2 நாமம் ஆயிரம்

முற்றத்தூடு புகுந்து
நின் முகம் காட்டிப் புன் முறுவல் செய்து
சிற்றிலோடு எங்கள் சின்தையும்
சிதைக்கக் கடவையோ கோவிந்தா
முற்ற மண்ணிடம் தாவி
விண்ணுற நீண்டு அளந்து கொண்டாய்
எம்மைப் பற்றி மெய்ப்பிணக்கு இட்டக்கால்
இந்தப் பக்கம் நின்றவர் என் சொல்லார் [2.9] [0522]

*சீதை வாய் அமுதம் உன்டாய்*
*எங்கள் சிற்றில் நீ சிதையேல் என்று*
*வீதி வாய் விளையாடும்*
*ஆயர் சிறுமியர் மழலைச் சொல்லை*
*வேத வாய்த் தொழிலார்கள் வாழ்*
*வில்லிபுத்தூர் மன் விட்டுசித்தன் தன்*
*கோதை வாய்த் தமிழ் வல்லவர்*
*குறைவின்றி வைகுந்தம் சேர்வரே* [2.10] [0523]

# நாச்சியார் திருமொழி

## 3 கோழி அழைப்பதன்

*கோழி அழைப்பதன் முன்னம்*
*குடைந்து நீராடுவான் போந்தோம்*
*ஆழியம் செல்வண்ன் எழுந்தான்*
*அரவணை மேல் பள்ளி கொண்டாய்*
*ஏழைமை ஆற்றவும் பட்டோம்*
*இனி என்றும் பொய்கைக்கு வாரோம்*
*தோழியும் நானும் தொழுதோம்*
*துகிலைப் பணித்து அருளாயே* [3.1] [0524]

இது என் புகுந்து இங்கு அன்தோ
இப் பொய்கைக்கு எவ்வாறு வந்தாய்
மதுவின் துழாய் முடி மாலே
மாயனே எங்கள் அமுதே
விதி இன்மையால் அது மாட்டோம்
வித்தகப் பிள்ளாய் விரையேல்
குதிகொண்டு அரவில் நடித்தாய்
குருந்திடக் கூறை பணியாய் [3.2] [0525]

எல்லே ஈதென்ன இளமை
எம் அனைமார் காணில் ஒட்டார்
பொல்லாங்கு ஈது என்று கருதாய்
பூங்குருந்து ஏறி இருத்தி
வில்லால் இலங்கை அழித்தாய்
நீ வேண்டியது எல்லாம் தருவோம்
பல்லாரும் காணாமே போவோம்
பட்டைப் பணித்து அருளாயே [3.3] [0526]

பரக்க விழித்து எங்கும் நோக்கிப்
பலர் குடைந்து ஆடும் சுனையில்
அரக்க நில்லா கண்ண நீர்கள்
அலமருகின்றவா பாராய்
இரக்கமேல் ஒன்றும் இலாதாய்
இலங்கை அழித்த பிரானே
குரக்கு அரசு ஆவது அறிந்தோம்
குருந்திடைக் கூறை பணியாய் [3.4] [0527]

# நாச்சியார் திருமொழி

## 3 கோழி அழைப்பதன்

காலைக் கது விடுகின்ற
கயலோடு வாளை விரவி
வேலைப் பிடித்து என்னைமார்கள் ஓட்டில்
என்ன விளையாட்டோ
கோலச் சிற்றாடை பலவும் கொண்டு
நீ யேறி இராதே
கோலம் கரிய பிரானே
குருந்திடைக் கூறை பணியாய் [3.5] [0528]

தடத்தவிழ் தாமரைப் பொய்கைத்
தாள்கள் எம் காலைக் கதுவ
விடத் தேள் எறிந்தாலே போல
வேதனை அற்றவும் பட்டோம்
குடத்தை எடுத்தேற விட்டு
கூத்தாட வல்ல எம் கோவே
படிற்றை எல்லாம் தவிர்ந்து
எங்கள் பட்டைப் பணித்து அருளாயே [3.6] [0529]

நீரிலே நின்று அயர்க்கின்றோம்
நீதி அல்லாதன செய்தாய்
ஊரகம் சாலவும் சேய்த்தால்
ஊழி எல்லாம் உணர்வானே
ஆர்வம் உனக்கே உடையோம்
அம்மனை மார் காணில் ஒட்டார்
போர விடாய் எங்கள் பட்டைப்
பூங்குருந்தெரி இராதே [3.7] [0530]

மாமிமார் மக்களே அல்லோம்
மற்றும் இங்கு எல்லாரும் போந்தார்
தூமலர்க் கண்கள் வளரத்
தொல்லை இராத் துயில்வானே
சேமமேல் அன்றிது சால
சிக்கென நாம் இது சொன்னோம்
கோமள ஆயர் கொழுந்தே
குருந்திடைக் கூறை பணியாய் [3.8] [0531]

# நாச்சியார் திருமொழி

## 3 கோழி அழைப்பதன்

கஞ்சன் வலை வைத்த அன்று
  காரிருள் எல்லில் பிழைத்து
நெஞ்சு துக்கம் செய்யப் போந்தாய்
  நின்ற இக் கன்னியரோமை
அஞ்ச உரப்பாள் அசோதை
  ஆணாட விட்டிட்டு இருக்கும்
வஞ்சகப் பேய்ச்சிபால் உண்ட
  மசிமையிலீ கூறை தாராய் [3.9] [0532]

*கன்னியரோடு எங்கள் நம்பி*
  *கரிய பிரான் விளையாட்டை*
*பொன் இயல் மாடங்கள் சூழ்ந்த*
  *புதுவையர் கோன் பட்டன் கோதை*
*இன்னிசையால் சொன்ன மாலை*
  *ஈரைந்தும் வல்லவர் தாம் போய்*
*மன்னிய மாதவனோடு*
  *வைகுந்தம் புக்கு இருப்பாரே* [3.10] [0533]

# நாச்சியார் திருமொழி

## 4 தெள்ளியார் பலர்

*தெள்ளியார்*
*பலர் கை தொழும் தேவனார்*
*வள்ளல்*
*மாலிருஞ்சோலை மணாளனார்*
*பள்ளி கொள்ளும் இடத்து*
*அடி கொட்டிடக்*
*கொள்ளு மாகில்*
***நீ கூடிடு கூடலே*** [4.1] [0534]

*காட்டில் வேங்கடம்*
*கண்ணபுர நகர்*
*வாட்டம் இன்றி*
*மகிழ்ந்துறை வாமனன்*
*ஓட்டரா வந்து*
*என் கைப் பற்றி*
*தன்னோடும் கூட்டு மாகில்*
***நீ கூடிடு கூடலே*** [4.2] [0535]

பூ மகன் புகழ் வானவர்
போற்றுதற்கு ஆமகன்
அணி வாணுதல்
தேவகி மாமகன்
மிகு சீர்
வசுதேவர் தம்
கோமகன் வரில்
கூடிடு கூடலே [4.3] [0536]

ஆய்ச்சி மார்களும்
ஆயரும் அஞ்சிட
பூத்த நீள்
கடம்பேறிப் புகப் பாய்ந்து
வாய்த்த காளியன் மேல்
நடம் ஆடிய
கூத்தனார் வரில்
கூடிடு கூடலே [4.4] [0537]

# நாச்சியார் திருமொழி

## 4 தெள்ளியார் பலர்

மாட மாளிகை சூழ்
　　மதுரைப் பதி நாடி
நம் தெருவின்
　　நடுவே வந்திட்டு
ஓடை மா
　　மத யானை உதைத்தவன்
கூடு மாகில்
　　நீ கூடிடு கூடலே [4.5] [0538]

அற்றவன்
　　மருதம் முறிய நடை கற்றவன்
கஞ்சனை
　　வஞ்சனையில் செற்றவன்
திகழும்
　　மதுரைப் பதி
கொற்றவன் வரில்
　　கூடிடு கூடலே [4.6] [0539]

அன்று இன்னாதன செய்
　　சிசுபாலனும்
நின்ற நீள்
　　மருதும் எருதும் புள்ளும்
வென்றி வேல்
　　விறல் கஞ்சனும் வீழ
முன் கொன்றவன் வரில்
　　கூடிடு கூடலே [4.7] [0540]

ஆவல் அன்புடையார் தம்
　　மனத்தன்றி மேவலன்
விரை சூழ்
　　துவராபதிக் காவலன்
கன்று மேய்த்து
　　விளையாடும்
கோவலன் வரில்
　　கூடிடு கூடலே [4.8] [0541]

# நாச்சியார் திருமொழி

## 4 தெள்ளியார் பலர்

கொண்ட கோலக்
குறள் உருவாய் சென்று
பண்டு மாவலி தன்
பெரு வேள்வியில்
அண்டமும் நிலனும்
அடி ஒன்றினால்
கொண்டவன் வரில்
கூடிடு கூடலே [4.9] [0542]

பழகு நான்மறையின் பொருளாய்
மதம் ஒழுகு வாரணம்
உய்ய
அளித்த
எம் அழகனார்
அணி ஆய்ச்சியர் சிந்தையுள்
குழகனார் வரில்
கூடிடு கூடலே [4.10] [0543]

***ஊடல் கூடல்***
***உணர்தல் புணர்தலை***
***நீடு நின்ற***
***நிறை புகழ் ஆய்ச்சியர்***
***கூடலைக்***
***குழற் கோதை முன் கூறிய***
***பாடல் பத்தும் வல்லார்க்கு***
***இல்லை பாவமே*** [4.11] [0544]

# நாச்சியார் திருமொழி

## 5 மன்னு பெரும்புகழ்

*மன்னு பெரும்புகழ் மாதவன்*
*மா மணி வண்ணன் மணிமுடி மைந்தன் தன்னை*
*உகந்தது காரணமாக*
*என் சங்கு இழக்கும் வழக்கு உண்டே*
*புன்னை குருக்கத்தி ஞாழல் செருந்திப்*
*பொதும்பினில் வாழும் குயிலே*
*பன்னி யெப்போதும் இருந்து விரைந்து*
*என் பவள வாயன் வரக் கூவாய்* [5.1] [0545]

வெள்ளை விளிசங்கு இடம் கையில் கொண்ட
விமலன் எனக்கு உருக் காட்டான்
உள்ளம் புகுந்து என்னை நைவித்து
நாளும் உயிர்பெய்து கூத்தாட்டுக் காணும்
கள்ளவிழ் செண்பகப் பூமலர் கோதிக்
களித்து இசை பாடும் குயிலே
மெள்ள இருந்து மிழற்றி மிழற்றாது
என் வேங்கடவன் வரக் கூவாய் [5.2] [0546]

மாதலி தேர் முன்பு கோல் கொள்ள
மாயன் இராவணன் மேல்
சர மாரி தாய் தலை அற்றற்று வீழத்
தொடுத்த தலைவன் வர எங்கும் காணேன்
போதலர் காவில் புதுமணம் நாறப்
பொறி வண்டின் காமரம் கேட்டு
உன் காதலியோடுடன் வாழ் குயிலே
என் கருமாணிக்கம் வரக் கூவாய் [5.3] [0547]

என்புருக்கி இன வேல் நெடுங் கண்கள்
இமை பொருந்தா பல நாளும்
துன்பக் கடல் புக்கு வைகுந்தன் என்பதோர்
தோணி பெறாது உழல்கின்றேன்
அன்புடையாரைப் பிரிவுறு நோய்
அது நீயும் அறிதி குயிலே
பொன் புரை மேனிக் கருளக் கொடி உடைப்
புண்ணியனை வரக் கூவாய் [5.4] [0548]

# நாச்சியார் திருமொழி

## 5 மன்னு பெரும்புகழ்

*மென்னடை அன்னம் பரந்து விளையாடும்*
*வில்லிபுத்தூர் உறைவான் தன்*
*பொன்னடி காண்பதோர் ஆசையினால்*
*என் பொரு கயல் கண்ணிணை துஞ்சா*
*இன் அடிசிலோடு பால் அமுதூட்டி*
*எடுத்த என் கோலக் கிளியை*
*உன்னொடு தோழமை கொள்ளுவன் குயிலே*
*உலகளந்தான் வரக் கூவாய்* [5.5] [0549]

எத்திசையும் அமரர் பணிந்து ஏத்தும்
இருடீகேசன் வலி செய்ய
முத்தன்ன வெண் முறுவல் செய்ய வாயும்
முலயும் அழகழிந்தேன் நான்
கொத்தலர் காவில் மணித்தடம்
கண்படை கொள்ளும் இளங்குயிலே
என் தத்துவனை வரக் கூகிற்றியாகில்
தலை அல்லால் கைம்மாறு இலேனே [5.6] [0550]

பொங்கிய பாற்கடல் பள்ளி கொள்வானைப்
புணர்வதோர் ஆசையினால்
என் கொங்கை கிளர்ந்து குமைத்துக் குதுகலித்து
ஆவியை ஆகுலம் செய்யும் அங்குயிலே
உனக்கென்ன மறைந்துறைவு
ஆழியும் சங்கும் ஒண் தண்டும்
தங்கிய கையவனை வரக் கூவில்
நீ சாலத் தருமம் பெறுதி [5.7] [0551]

சார்ங்கம் வளைய வலிக்கும்
தடக்கைச் சதுரன் பொருத்தம் உடையன்
நாங்கள் எம் இல்லிருந்து ஒட்டிய கச்சங்கம்
நானும் அவனும் அறிதும்
தேங்கனி மாம் பொழில் செந்தளிர் கோதும்
சிறு குயிலே
திருமாலை ஆங்கு விரைந்து ஒல்லை கூகிற்றியாகில்
அவனை நான் செய்வன காணே [5.8] [0552]

# நாச்சியார் திருமொழி

## 5 மன்னு பெரும்புகழ்

பைங்கிளி வண்ணன் சிரீதரன் என்பதோர்
 பாசத்து அகப்பட்டு இருந்தேன்
பொங்கு ஒளி வண்டு இரைக்கும் பொழில் வாழ் குயிலே
 குறிக்கொண்டு இது நீ கேள்
சங்கொடு சக்கரத்தான் வரக் கூவுதல்
 பொன்வளை கொண்டு தருதல்
இங்குள்ள காவினில் வாழக் கருதில்
 இரண்டத்து ஒன்றேல் திண்ணம் வேண்டும் [5.9] [0553]

அன்று உலகம் அளந்தானை உகந்து
 அடிமைக்கண் அவன் வலி செய்ய
தென்றலும் திங்களும் ஊடறுத்து
 என்னை நலியும் முறைமை அறியேன்
என்றும் இக்காவில் இருந்திருந்து
 என்னைத் தகர்த்தாதே நீயும் குயிலே
இன்று நாராயணனை வரக் கூவாயேல்
 இங்குத்தை நின்றும் துரப்பன் [5.10] [0554]

*விண்ணுற நீண்டடி தாவிய மைந்தனை*
 *வேற்கண் மடந்தை விரும்பி*
*கண்ணுற என் கடல் வண்ணனைக்*
 *கூவு கருங்குயிலே என்ற மாற்றம்*
*பண்ணுறு நான் மறையோர் புதுவை மன்னன்*
 *பட்டர்பிரான் கோதை சொன்ன*
*நண்ணுறு வாசக மாலை வல்லார்*
 *நமோ நாராயணாய என்பாரே* [5.11] [0555]

# நாச்சியார் திருமொழி

## 6 வாரணம் ஆயிரம்

***வாரணம் ஆயிரம்***
***சூழ வலம் செய்து***
***நாரண நம்பி***
***நடக்கின்றான் என்றெதிர்***
***பூரண பொற்குடம்***
***வைத்துப் புறம் எங்கும்***
***தோரணம் நாட்டக்***
***கனாக் கண்டேன் தோழீ நான்*** [6.1] [0556]

நாளை வதுவை
மணம் என்று நாள் இட்டு
பாளை கமுகு
பரிசுடைப் பந்தல் கீழ்
கோளரி மாதவன்
கோவிந்தன் என்பான் ஓர்
காளை புகுதக்
கனாக் கண்டேன் தோழீ நான் [6.2] [0557]

இன்திரன் உள்ளிட்ட
தேவர் குழாம் எல்லாம்
வந்திருந்து என்னை
மகட்பேசி மந்திரித்து
மந்திரக் கோடி உடுத்தி
மண மாலை
அந்தரி சூட்டக்
கனாக் கண்டேன் தோழீ நான் [6.3] [0558]

நால் திசைத் தீர்த்தம் கொணர்ந்து
நனி நல்கி
பார்ப்பனச் சிட்டர்கள்
பல்லார் எடுத்தேத்தி
பூப் புனை கண்ணிப்
புனிதனோடு என் தன்னை
காப்பு நாண் கட்டக்
கனாக் கண்டேன் தோழீ நான் [6.4] [0559]

# நாச்சியார் திருமொழி

## 6 வாரணம் ஆயிரம்

கதிரொளி தீபம்
    கலசம் உடன் ஏந்தி
சதிரிள மங்கையர்
    தாம் வந்து எதிர் கொள்ள
மதுரையார் மன்னன்
    அடி நிலை தொட்டு எங்கும்
அதிரப் புகுதக்
    கனாக் கண்டேன் தோழீ நான் [6.5] [0560]

மத்தளம் கொட்ட
    வரி சங்கம் நின்றூத
முத்துடைத் தாமம்
    நிரை தாழ்ந்த பந்தல் கீழ்
மைத்துனன் நம்பி
    மதுசூதன் வந்து என்னைக்
கைத்தலம் பற்றக்
    கனாக் கண்டேன் தோழீ நான் [6.6] [0561]

வாய் நல்லார்
    நல்ல மறை ஓதி மந்திரத்தால்
பாசிலை நாணல் படுத்துப்
    பரிதி வைத்து
காய் சின மா களிறு அன்னான்
    என் கைப்பற்றி
தீ வலம் செய்யக்
    கனாக் கண்டேன் தோழீ நான் [6.7] [0562]

இம்மைக்கும்
    ஏழேழ் பிறவிக்கும் பற்றாவான்
நம்மை உடையவன்
    நாராயணன் நம்பி
செம்மை உடைய
    திருக்கையால் தாள் பற்றி
அம்மி மிதிக்கக்
    கனாக் கண்டேன் தோழீ நான் [6.8] [0563]

# நாச்சியார் திருமொழி

### 6 வாரணம் ஆயிரம்

வரிசிலை வாள் முகத்து
 என்னைமார் தாம் வந்திட்டு
எரிமுகம் பாரித்து
 என்னை முன்னே நிறுத்தி
அரிமுகன் அச்சுதன்
 கைம்மேல் என் கை வைத்து
பொரி முகந்து அட்டக்
 கனாக் கண்டேன் தோழீ நான் [6.9] [0564]

குங்குமம் அப்பிக்
 குளிர் சாந்தம் மட்டித்து
மங்கல வீதி
 வலம் செய்து மண நீர்
அங்கவனோடும்
 உடன் சென்று அங்கானை மேல்
மஞ்சனம் ஆட்டக்
 கனாக் கண்டேன் தோழீ நான் [6.10] [0565]

***ஆயனுக் காகத்***
 ***தான் கண்ட கனாவினை***
***வேயர் புகழ்***
 ***வில்லிபுத்தூர்க் கோன் கோதை சொல்***
***தூய தமிழ் மாலை***
 ***ஈரைந்தும் வல்லவர்***
***வாயு நன் மக்களைப் பெற்று***
 ***மகிழ்வரே*** [6.11] [0566]

# நாச்சியார் திருமொழி

## 7 கருப்பூரம் நாறுமோ

***கருப்பூரம் நாறுமோ***
***கமலப் பூ நாறுமோ***
***திருப் பவளச் செவ்வாய்தான்***
***தித்தித்து இருக்கும்மோ***
***மருப்பு ஒசித்த மாதவன் தன்***
***வாய்ச் சுவையும் நாற்றமும்***
***விருப்புற்றுக் கேட்கின்றேன்***
***சொல் ஆழி வெண் சங்கே*** [7.1] [0567]

கடலில் பிறந்து
கருதாது
பஞ்சசனன் உடலில் வளர்ந்து போய்
ஊழியான் கைத்தலத்து
இடரில் குடி ஏறி
தீய அசுரர்
நடலைப் பட முழங்கும்
தோற்றத்தாய் நல் சங்கே [7.2] [0568]

தட வரையின் மீதே
சரற்கால சந்திரன்
இடை உவாவில் வந்து
எழுந்தாலே போல
நீயும் வட மதுரையார் மன்னன்
வாசுதேவன் கையில்
குடியேறி வீற்றிருந்தாய்
கோலப் பெருஞ் சங்கே [7.3] [0569]

சந்திர மண்டலம் போல்
தாமோதரன் கையில்
அந்தரம் ஒன்றின்றி
ஏறி அவன் செவியில்
மந்திரம் கொள்வாயே போலும்
வலம்புரியே
இந்திரனும் உன்னோடு
செல்வத்துக்கு ஏலானே [7.4] [0570]

# நாச்சியார் திருமொழி

## 7 கருப்பூரம் நாறுமோ

உன்னோடு உடனே
ஒரு கடலில் வாழ்வாரை
இன்னார் இனையார் என்று
எண்ணுவார் இல்லை காண்
மன்னாகி நின்ற
மதுசூதன் வாய் அமுதம்
பன்னாளும் உண்கின்றாய்
பாஞ்சசன்னியமே [7.5] [0571]

போய்த் தீர்த்தம் ஆடாதே
நின்ற புணர் மருதம்
சாய்த்தீர்த்தான் கைத்தலத்தே
ஏறிக் குடிகொண்டு
சேய்த் தீர்த்தமாய் நின்ற
செங்கண் மால் தன்னுடைய
வாய்த் தீர்த்தம் பாய்ந்தாட வல்லாய்
வலம்புரியே [7.6] [0572]

செங்கமல நாண் மலர் மேல்
தேனுகரும் அன்னம் போல்
செங்கன் கருமேனி
வாசுதேவனுடைய
அங்கைத் தலம் ஏறி
அன்ன வசம் செய்யும்
சங்கரையா உன் செல்வம்
சால அழகியதே [7.7] [0573]

உண்பது சொல்லில்
உலகளந்தான் வாயமுதம்
கண்படை கொள்ளல்
கடல் வண்ணன் கைத்தலத்தே
பெண் படையார் உன் மேல்
பெரும் பூசல் சாற்றுகின்றார்
பண்பல செய்கின்றாய்
பாஞ்சசன்னியமே [7.8] [0574]

# நாச்சியார் திருமொழி

## 7 கருப்பூரம் நாறுமோ

பதினாறாம் ஆயிரவர்
தேவிமார் பார்த்திருப்ப
மது வாயில் கொண்டாற்போல்
மாதவன் தன் வாயமுதம்
பொதுவாக உண்பதனைப்
புக்கு நீ உண்டக்கால்
சிதையாரோ உன்னோடு
செல்வப் பெரும் சங்கே [7.9] [0575]

*பாஞ்சசன்னியத்தைப்*
*பற்பநாபனோடும்*
*வாய்ந்த பெரும் சுற்றம்*
***ஆக்கிய வண் புதுவை***
*ஏய்ந்த புகழ்ப் பட்டர்பிரான்*
***கோதை தமிழ் ஈரைந்தும்***
***ஆய்ந்து ஏத்த வல்லார்***
***அவரும் அணுக்கரே*** [7.10] [0576]

# நாச்சியார் திருமொழி

## 8 விண்ணீல மேலாப்பு

***விண்ணீல மேலாப்பு***
***விரித்தாற்போல் மேகங்காள்***
***தெண்ணீர் பாய் வேங்கடத்து***
***என் திருமாலும் போந்தானே***
***கண்ணீர்கள் முலைக்குவட்டில்***
***துளிசோரச் சோர்வேனை***
***பெண்ணீர்மை ஈடழிக்கும்***
***இது தமக்கோர் பெருமையே*** [8.1] [0577]

மா முத்தநிதி சொரியும்
மா முகில்காள்
வேங்கடத்துச் சாமத்தின் நிறங்கொண்ட
தாளாளன் வார்த்தை என்னே
காமத்தீ உள்புகுந்து
கதுவப்பட்டு இடைக் கங்குல்
ஏமத்தோர் தென்றலுக்கு
இங்கு இலக்காய் நா இருப்பேனே [8.2] [0578]

ஒளி வண்ணம் வளை சிந்தை
உறக்கத்தோடு இவை எல்லாம்
எளிமையால் இட்டு என்னை
ஈடழியப் போயினவால்
குளிர் அருவி வேங்கடத்து
என் கோவிந்தன் குணம் பாடி
அளியத்த மேகன்காள்
ஆவி காத்து இருப்பேனே [8.3] [0579]

மின் ஆகத்து எழுகின்ற
மேகன்ங்காள்
வேங்கடத்து தன் ஆகத் திருமங்கை
தங்கிய சீர் மார்வற்கு
என் ஆகத்து இளங் கொங்கை
விரும்பித் தாம் நாள் தோறும்
பொன் ஆகம் புல்குதற்கு
என் புரிவுடைமை செப்புமினே [8.4] [0580]

# நாச்சியார் திருமொழி

## 8 விண்ணீல மேலாப்பு

வான் கொண்டு கிளர்ந்து எழுந்த
 மா முகில்காள்
வேங்கடத்துத் தேண் கொண்ட மலர் சிதறத்
 திரண்டேறிப் பொழிவீர்காள்
ஊன் கொண்ட வள் உகிரால்
 இரணியனை உடல் இடந்தான்
தான் கொண்ட சரி வளைகள்
 தருமாகில் சாற்றுமினே [8.5] [0581]

சலங்கொன்டு கிளர்ந்து எழுந்த
 தண் முகில்காள்
மாவலியை நிலம் கொண்டான் வேங்கடத்தே
 நிரந்தேறிப் பொழிவீர்காள்
உலங்குண்ட விளங்கனி போல்
 உள் மெலியப் புகுந்து
என்னை நலங்கொண்ட நாரணற்கு
 என் நடலை நோய் செப்புமினே [8.6] [0582]

*சங்க மா கடல் கடைந்தான்*
 *தண் முகில்காள்*
*வேங்கடத்துச் செங்கண் மால் சேவடிக் கீழ்*
 *அடி வீழ்ச்சி விண்ணப்பம்*
*கொங்கை மேல் குங்குமத்தின்*
 *குழம்பு அழியப் புகுந்து*
*ஒருநாள் தங்குமேல்*
 *என் ஆவி தங்கும் என்று உரயீரே* [8.7] [0583]

கார் காலத்து எழுகின்ற
 கார்முகில்காள்
வேங்கடத்துப் போர் காலத்து எழுந்தருளிப்
 பொருதவனார் பேர் சொல்லி
நீர் காலத் தெருக்கில்
 அம் பழவிலை போல் வீழ்வேனை
வார் காலத்து ஒரு நாள்
 தம் வாசகம் தந்தருளாரே [8.8] [0584]

# நாச்சியார் திருமொழி

## 8 விண்ணீல மேலாப்பு

*மத யானை போல் எழுந்த*
*மா முகில்காள்*
*வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள்*
*பாம்பணையான் வார்த்தை என்னே*
*கதி என்றும் தான் ஆவான்*
*கருதாது*
*ஓர் பெண் கொடியை வதை செய்தான் என்னும் சொல்*
*வையகத்தார் மதியாரே* [8.9] [0585]

*நாகத்தின் அணையானை*
*நன்னுதலாள் நயந்துரை செய் மேகத்தை*
*வேங்கடக் கோன்*
*விடுதூதில் விண்ணப்பம்*
*போகத்தில் வழுவாத*
*புதுவையர்கோன் கோதை தமிழ்*
*ஆகத்து வைத்துரைப்பார்*
*அவர் அடியார் ஆகுவரே* [8.10] [0586]

# நாச்சியார் திருமொழி

### 9 சிந்தூரச் செம்பொடி

*சிந்தூரச் செம்பொடிப் போல்*
*திருமாலிருஞ்சோலை எங்கும்*
*இந்திர கோபங்களே*
*எழுந்தும் பரந்திட்டனவால்*
*மந்தரம் நாட்டி அன்று*
*மதுரக் கொழுஞ்சாறு கொண்ட*
*சுந்தரத் தோளுடையான்*
*சுழலையில் நின்று உய்துங்கொலோ* [9.1] [0587]

போர்க் களிறு பொரும்
மாலிருஞ்சோலை அம் பூம்புறவில்
தார்க்கொடி முல்லைகளும்
தவள நகை காட்டுகின்ற
கார்க்கொள் படாக்கள் நின்று
கழறிச் சிரிக்கத் தரியேன்
ஆர்க்கு இடுகோ தோழி
அவன் தார் செய்த பூசலையே [9.2] [0588]

கருவிளை ஒண் மலர்காள்
காயா மலர்காள்
திருமால் உரு வொளி காட்டுகின்றீர்
எனக்கு உய் வழக்கு ஒன்று உரையீர்
திருவிளையாடு திண் தோள்
திருமாலிருஞ்சோலை நம்பி
வரிவளை இல் புகுந்து
வந்தி பற்றும் வழக்கு உளதே [9.3] [0589]

பைம்பொழில் வாழ் குயில்காள் மயில்காள்
ஒண் கருவிளைகாள்
வம்பக் களங்கனிகாள்
வண்ணப் பூவை நறுமலர்காள்
ஐம் பெரும் பாதகர்காள்
அணி மாலிருஞ்சோலை நின்ற
எம்பெருமானுடைய நிறம்
உங்களுக்கு என் செய்வதே [9.4] [0590]

# நாச்சியார் திருமொழி

## 9 சிந்தூரச் செம்பொடி

துங்க மலர்ப் பொழில் சூழ்
திருமாலிருஞ்சோலை நின்ற
செங்கண் கருமுகிலின்
திருவுருப் போல்
மலர்மேல் தொங்கிய வண்டினங்காள்
தொகு பூஞ்சுனைகாள்
சுனையில் தங்கு செந்தாமரைகாள்
எனக்கோர் சரண் சாற்றுமினே [9.5] [0591]

***நாறு நறும் பொழில்
மாலிருஞ்சோலை நம்பிக்கு
நான் நூறு தடாவில் வெண்ணெய்
வாய் நேர்ந்து பராவி வைத்தேன்
நூறு தடா நிறைந்த
அக்கார அடிசில் சொன்னேன்
ஏறு திருவுடையான்
இன்று வந்திவை கொள்ளுங்கொலோ*** [9.6] [0592]

இன்று வந்தித்தனையும்
அமுது செய்திடப் பெறில்
நான் ஒன்று நூறாயிரமாக் கொடுத்துப்
பின்னும் ஆளும் செய்வன்
தென்றல் மணம் கமழும்
திருமாலிருஞ்சோலை தன்னுள் நின்றபிரான்
அடியேன் மனத்தே
வந்து நேர் படிலே [9.7] [0593]

காலை எழுந்திருந்து
கரிய குருவிக் கணங்கள்
மாலின் வரவு சொல்லி
மருள் பாடுதல் மெய்ம்மைகொலோ
சோலைமலைப் பெருமான்
துவராபதி எம்பெருமான்
ஆலின் இலைப் பெருமான்
அவன் வார்த்தை யுரைக்கின்றதே [9.8] [0594]

# நாச்சியார் திருமொழி

## 9 சிந்தூரச் செம்பொடி

கோங்கலரும் பொழில்
மாலிருஞ்சோலையில் கொன்றைகள் மேல்
தூங்கு பொன் மாலைகளோடு
உடனாய் நின்று தூங்குகின்றேன்
பூங்கொள் திருமுகத்து
மடுத்தூதிய சங்கொலியும்
சார்ங்கவில் நாண் ஒலியும்
தலைப் பெய்வது எஞ் ஞான்று கொலோ [9.9] [0595]

*சந்தொடு காரகிலும் சுமந்து*
*தடங்கள் பொருது*
*வந்திழியும் சிலம்பாறுடை*
*மாலிருஞ்சோலை நின்ற சுந்தரனை*
*சுரும்பார் குழல்*
*கோதை தொகுத்துரைத்த*
*செந்தமிழ் பத்தும் வல்லார்*
*திருமால் அடி சேர்வர்களே* [9.10] [0596]

# நாச்சியார் திருமொழி

## 10 கார்க்கோடல் பூக்காள்

***கார்க்கோடல் பூக்காள்***
***கார்க்கடல் வண்ணன் என் மேல்***
***உம்மைப் போர்க் கோலம் செய்து***
***போர விடுத்தவன் எங்குற்றான்***
***ஆர்க்கோ இனி நாம்***
***பூசல் இடுவது***
***அணிதுழாய்த் தார்க்கோடும் நெஞ்சந் தன்னை***
***படைக்க வல்லேன் அந்தோ*** [10.1] [0597]

மேல் தோன்றிப் பூக்காள்
மேல் உலகங்களின் மேது போய்
மேல் தோன்றும் சோதி
வேத முதல்வர் வலங்கையில்
மேல் தோன்றும் ஆழியின்
வெஞ்சுடர் போலச் சுடாது
எம்மை மாற்றோலைப் பட்டவர் கூட்டத்து
வைத்து கொள்கிற்றிரே [10.2] [0598]

கோவை மணாட்டி
நீய் உன் கொழுங்கனி கொண்டு
எம்மை ஆவி தொலைவியேல்
வாயழகர் தம்மை அஞ்சுதும்
பாவியேன் தோன்றிப்
பாம்பணையார்க்கும் தம் பாம்பு போல்
நாவும் இரண்டு உள வாய்த்து
நாண் இலியேனுக்கே [10.3] [0599]

முல்லைப் பிராட்டி
நீ உன் முறுவல்கள் கொண்டு
எம்மை அல்லல் விளைவியேல்
ஆழி நங்காய் உன் அடைக்கலம்
கொல்லை அரக்கியை மூக்கரிந்திட்ட
குமரனார் சொல்லும் பொய்யானால்
நானும் பிறந்தமை பொய் அன்றே [10.4] [0600]

# நாச்சியார் திருமொழி

## 10 கார்க்கோடல் பூக்காள்

பாடும் குயில்காள்
ஈதென்ன பாடல்
நல் வேங்கட நாடர் நமக்கொரு வாழ்வு தந்தால்
வந்து பாடுமின்
ஆடும் கருளக் கொடி உடையார்
வந்தருள் செய்து
கூடுவராயிடில்
கூவி நும் பாட்டுகள் கேட்டுமே [10.5] [0601]

கண மா மயில்காள்
கண்ணபிரான் திருக்கோலம் போன்று
அணி மா நடம் பயின்று ஆடுகின்றீக்கு
அடி வீழ்கின்றேன்
பணம் ஆடரவணைப்
பற்பல காலமும் பள்ளிகொள்
மணவாளர் நம்மை வைத்த
பரிசு இது காண்மினே [10.6] [0602]

நடம் ஆடித் தோகை விரிக்கின்ற
மா மயில்காள்
உம்மை நடம் ஆட்டம் காணப்
பாவியேன் நான் ஓர் முதல் இலேன்
குடம் ஆடு கூத்தன்
கோவிந்தன் கோமிறை செய்து
எம்மை உடை மாடு கொண்டாண்
உங்களுக்கு இனி ஒன்று போதுமே [10.7] [0603]

மழையே மழையே மண் புறம் பூசி
உள்ளாய் நின்று
மெழுகு ஊற்றினாற் போல்
ஊற்றுநல் வேங்கடத்துள் நின்ற
அழகப் பிரானார் தம்மை
என் நெஞ்சத்து அகப்படத் தழவ நின்று
என்னைத் ததர்த்திக் கொண்டு
ஊற்றவும் வல்லையே [10.8] [0604]

# நாச்சியார் திருமொழி

## 10 கார்க்கோடல் பூக்காள்

கடலே கடலே உன்னைக் கடைந்து
கலக்கு உறுத்து
உடலுள் புகுந்து நின்று
ஊறல் அறுத்தவற்கு
என்னையும் உடலுள் புகுந்து நின்று
ஊறல் அறுக்கின்ற மாயற்கு
என் நடலைகள் எல்லாம்
நாகணைக்கே சென்று உரைத்தியே [10.9] [0605]

*நல்ல என் தோழி*
*நாகணை மிசை நம்பரர்*
*செல்வர் பெரியர்*
*சிறு மானிடவர் நாம் செய்வதென்*
*வில்லி புதுவை*
*விட்டுசித்தர் தங்கள் தேவரை*
*வல்ல பரிசு வருவிப்பரேல்*
***அது காண்டுமே*** [10.10] [0606]

# நாச்சியார் திருமொழி

## 11 தாம் உகக்கும்

*தாம் உகக்கும் தம் கையில்*
*சங்கமே போலாவோ*
*யாம் உகக்கும் எம் கையில்*
*சங்கமும் ஏந்திழையீர்*
*தீ முகத்து நாகணைமேல்*
*சேரும் திருவரங்கர்*
*ஆ முகத்தை நோக்காரால்*
*அம்மனே அம்மனே* [11.1] [0607]

எழில் உடைய அம்மனைமீர்
என் அரங்கத்து இன் அமுதர்
குழல் அழகர் வாய் அழகர்
கண் அழகர்
கொப்பூழில் எழுக மலப் பூவழகர்
எம் மானார்
என்னுடைய கழல் வளையைத் தாமும்
கழல் வளையே ஆக்கினரே [11.2] [0608]

*பொங்கோதம் சூழ்ந்த*
*புவனியும் விண் உலகும்*
*அங்காதும் சோராமே*
*ஆள்கின்ற எம்பெருமான்*
*செங்கோல் உடைய*
*திருவரங்கச் செல்வனார்*
*எங்கோல் வளையால்*
*இடர் தீர்வர் ஆகாதே* [11.3] [0609]

மச்சணி மாட
மதிள் அரங்கர் வாமனனார்
பச்சைப் பசுந் தேவர்
தாம் பண்டு நீர் ஏற்ற
பிச்சைக் குறையாகி
என்னுடைய பெய்வளை மேல்
இச்சை உடையரேல்
இத்தெருவே போதாரே [11.4] [0610]

# நாச்சியார் திருமொழி

### 11 தாம் உகக்கும்

பொல்லாக் குறள் உருவாய்ப்
பொற் கையில் நீர் ஏற்று
எல்லா உலகும்
அளந்து கொண்ட எம் பெருமான்
நல்லார்க்கள் வாழும்
நளிர் அரங்க நாகணையான்
இல்லாதோம் கைப்பொருளும்
எய்துவான் ஒத்துளனே [11.5] [0611]

கைப் பொருள்கள் முன்னமே
கைக் கொண்டார்
காவிரி நீர் செய்ப் புரள ஓடும்
திருவரங்கச் செல்வனார்
எப் பொருட்கும் நின்றார்க்கும்
எய்தாது
நான் மறையின் சொற்பொருளாய் நின்றார்
என் மெய்ப்பொருளும் கொண்டாரே [11.6] [0612]

உண்ணாது உறங்காது
ஒலி கடலை ஊடறுத்து
பெண் ஆக்கை யாப்புண்டு
தாம் உற்ற பேதெல்லாம்
திண்ணார் மதிள் சூழ்
திருவரங்கச் செல்வனார்
எண்ணாதே தம்முடைய
நன்மைகளே எண்ணுவரே [11.7] [0613]

*பாசி தூர்த்துக் கிடந்த*
*பார்மகட்கு*
*பண்டொருநாள் மாசுடம்பில் நீர் வாரா*
*மானம் இலாப் பன்றியாம்*
*தேசுடைய தேவர்*
*திருவரங்கச் செல்வனார்*
*பேசி இருப்பனகள்*
*பேர்க்கவும் பேராவே* [11.8] [0614]

## 11 தாம் உகக்கும்

கண்ணாலம் கோடித்துக்
  கன்னி தன்னைக் கைப் பிடிப்பான்
திண் ஆர்ந்து இருந்த
  சிசுபாலன் தேசு அழிந்து
அண்ணாந்து இருக்கவே
  ஆங்கவளைக் கைப் பிடித்த
பெண்ணாளன் பேணும் ஊர்
  பேரும் அரங்கமே [11.9] [0615]

*செம்மை உடைய*
  *திருவரங்கர் தாம் பணித்த*
*மெய்மைப் பெரு வார்த்தை*
  *விட்டுசித்தர் கேட்டிருப்பர்*
*தம்மை உகப்பாரைத்*
  *தாம் உகப்பர் என்னும் சொல்*
*தம்மிடையே பொய்யானால்*
  ***சாதிப்பார் ஆர் இனியே*** [11.10] [0616]

# நாச்சியார் திருமொழி

## 12 மற்று இருந்தீர்

***மற்று இருந்தீர் கட்கு அறியலாகா***
***மாதவன் என்பதோர் அன்பு தன்னை***
***உற்று இருந்தேனுக்கு உரைப்பதெல்லாம்***
***ஊமையரோடு செவிடர் வார்த்தை***
***பெற்று இருந்தாளை ஒழியவே போய்ப்***
***பேர்த்தொரு தாயில் வளர்ந்த நம்பி***
***மற் பொருந்தாமற் களம் அடைந்த***
***மதுரைப் புறத்து என்னை உய்த்திடுமின்*** [12.1] [0617]

நாணி இனியோர் கருமம் இல்லை
நால் அயலாரும் அறிந்தொழிந்தார்
பாணியாது என்னை மருந்து செய்து
பண்டு பண்டாக்க உறுதிராகில்
மாணி உருவாய் உலகு அளந்த
மாயனைக் காணில் தலைமறியும்
ஆணையால் நீர் என்னைக் காக்க வேண்டில்
ஆய்ப்பாடிக்கே என்னை உய்த்திடுமின் [12.2] [0618]

தந்தையும் தாயும் உற்றாரும் நிற்க
தனிவழி போயினாள் என்னும் சொல்லு
வந்த பின்னைப் பழி காப்பு அரிது
மாயவன் வந்து உருக் காட்டுகின்றான்
கொந்தளம் ஆக்கிப் பரக்கழித்துக்
குறும்பு செய்வான் ஓர் மகனைப் பெற்ற
நந்தகோபாலன் கடைத்தலைக்கே
நள் இருட்கண் என்னை உய்த்திடுமின் [12.3] [0619]

அங்கைத் தலத்திடை ஆழி கொண்டான்
அவன் முகத்தன்றி விழியேன் என்று
செங்கச்சுக் கொண்டு கண் ஆடை ஆர்த்துச்
சிறு மாண்னிடவரைக் காணில் நாணும்
கொங்கைத் தலம் இவை நோக்கிக் காணீர்
கோவிந்தனுக்கு அல்லால் வாயில் போகா
இங்குத்தை வாழ்வை ஒழியவே போய்
யமுனைக் கரைக்கென்னை உய்த்திடுமின் [12.4] [0620]

# நாச்சியார் திருமொழி

## 12 மற்று இருந்தீர்

ஆர்க்கும் என்னோய் இது அறியலாகாது
அம்மனைமீர் துழதிப் படாதே
கார்க்கடல் வண்ணன் என்பான் ஒருவன்
கைகண்ட யோகம் தடவத் தீரும்
நீர்க் கரை நின்ற கடம்பை ஏறிக்
காளியன் உச்சியில் நட்டம் பாய்ந்து
போர்க்களமாக நிருத்தம் செய்த
பொய்கைக் கரைக்கென்னை உய்த்திடுமின் [12.5] [0621]

கார்த்தண் முகிலும் கருவிளையும்
காயா மலரும் கமலப் பூவும்
ஈர்த்து இடுகின்றன என்னை வந்திட்டு
இருடீகேசன் பக்கல் போகே என்று
வேர்த்துப் பசித்து வயிறு அசைந்து
வேண்டு அடிசில் உண்ணும் போது
ஈதென்று பார்த்திருந்து நெடு நோக்குக் கொள்ளும்
பத்த விலோசநத்து உய்த்திடுமின் [12.6] [0622]

வண்ணம் திரிவும் மனம் குழைவும்
மானம் இலாமையும் வாய் வெளுப்பும்
உண்ணல் உறாமையும் உள் மெலிவும்
ஓத நீர் வண்ணன் என்பான் ஒருவன்
தண்ணந் துழாய் என்னும் மாலை கொண்டு
சூட்டத் தணியும் பிலம்பன் தன்னைப்
பண் அழியப் பலதேவன் வென்ற
பாண்டிவடத்து என்னை உய்த்திடுமின் [12.7] [0623]

கற்றினம் மேய்க்கிலும் மேய்க்கப் பெற்றான்
காடு வாழ் சாதியும் ஆகப் பெற்றான்
பற்றி உரலிடையாப்பும் உண்டான்
பாவிகாள் உங்களுக்கு ஏச்சுக் கொலோ
கற்றன பேசி வசவுணாதே
காலிகள் உய்ய மழை தடுத்துக்
கொற்றக் குடையாக ஏந்தி நின்ற
கோவர்த்தனத்து என்னை உய்த்திடுமின் [12.8] [0624]

# நாச்சியார் திருமொழி

## 12 மற்று இருந்தீர்

கூட்டில் இருந்து கிளி எப்போதும்
கோவிந்தா கோவிந்தா என்று அழைக்கும்
ஊட்டக் கொடாது செறுப்பனாகில்
உலகு அளந்தான் என்று உயரக் கூவும்
நாட்டில் தலைப்பழி எய்தி
உங்கள் நன்மை இழந்து தலையிடாதே
சூட்டுயர் மாடங்கள் சூழ்ந்து தோன்றும்
துவராபதிக்கென்னை உய்த்திடுமின் [12.9] [0625]

*மன்னு மதுரை தொடக்கமாக*
*வண் துவராபதி தன் அளவும்*
*தன்னைத் தமர் உய்த்துப் பெய்ய வேண்டித்*
*தாழ் குழலாள் துணிந்த துணிவை*
*பொன் இயல் மாடம் பொலிந்து தோன்றும்*
*புதுவையர்கோன் விட்டு சித்தன் கோதை*
*இன்னிசையால் சொன்ன செஞ்சொல் மாலை*
*ஏத்த வல்லார்க்கு இடம் வைகுந்தமே* [12.10] [0626]

# நாச்சியார் திருமொழி

## 13 கண்ணன் என்னும்

***கண்ணன் என்னும் கருந்தெய்வம்***
***காட்சி பழகிக் கிடப்பேனை***
***புண்ணில் புளிப் பெய்தாற்போல்***
***புறம் நின்று அழகு பேசாதே***
***பெண்ணின் வருத்தம் அறியாத***
***பெருமான் அரையில் பீதக வண்ண ஆடை கொண்டு***
***என்னை வாட்டம் தணிய வீசீரே*** [13.1] [0627]

பால் ஆலிலையில் துயில் கொண்ட
பரமன் வலைப்பட்டு இருந்தேனை
வேலால் துன்னம் பெய்தாற்போல்
வேண்டிற்று எல்லாம் பேசாதே
கோலால் நிரைமேய்த்து ஆயனாய்க்
குடந்தைக் கிடந்த குடம் ஆடி
நீலார் தண்ணந் துழாய் கொண்டு
என் நெறி மேன் குழல் மேல் சூட்டீரே [13.2] [0628]

கஞ்சைக் காய்ந்த கருவில்லி
கடைக்கன் என்னும் சிறைக்கோலால்
நெஞ்சு ஊடுருவ வேவுண்டு
நிலையும் தளர்ந்து நைவேனை
அஞ்சேல் என்னான் அவன் ஒருவன்
அவன் மார்வு அணிந்த வனமாலை
வஞ்சியாதே தருமாகில்
மார்வில் கொணர்ந்து புரட்டீரே [13.3] [0629]

ஆரே உலகத்து ஆற்றுவார்
ஆயர் பாடி கவர்ந்து உண்ணும்
காரேர் உழக்க உழக்கு உண்டு
தளர்ந்தும் முறிந்தும் கிடப்பேனை
ஆராவமுதம் அனையான் தன்
அமுத வாயில் ஊறிய
நீர் தான் கொணர்ந்து புலராமே
பருக்கி இளைப்பை நீக்கீரே [13.4] [0630]

## 13 கண்ணன் என்னும்

அழிலும் தொழிலும் உருக் காட்டான்
அஞ்சேல் என்னான் அவன் ஒருவன்
தழுவி முழுகிப் புகுந்து என்னை
சுற்றிச் சுழன்று போகானால்
தழையின் பொழில்வாய் நிரைப் பின்னே
நெடு மால் ஊதி வருகின்ற
குழலின் தொளைவாய் நீர் கொன்டு
குளிர முகத்துத் தடவீரே [13.5] [0631]

நடை ஒன்றில்லா உலகத்து
நந்தகோபன் மகன் என்னும்
கொடிய கடிய திருமாலால்
குளப்புக் கூறு கொளப்பட்டு
புடையும் பெயரகில்லேன் நான்
போட்கன் மிதித்த அடிப்பாட்டில்
பொடித்தான் கொணர்ந்து புசீர்கள்
போகா உயிர் என் உடம்பையே [13.6] [0632]

வெற்றிக் கருள கொடியான் தன்
மீமீது ஆடா உலகத்து
வெற்ற வெறிதே பெற்ற தாய்
வேம்பே ஆக வளர்த்தாளே
குற்றம் அற்ற முலை தன்னைக்
குமரன் கோலப் பணைத்தோளோடு
அற்ற குற்றம் அவை தீர
அணைய அமுக்கிக் கட்டீரே [13.7] [0633]

உள்ளே உருகி நைவேனை
உளளோ இலளோ என்னாத
கொள்ளை கொள்ளிக் குறும்பனைக்
கோவர்தனனைக் கண்டக்கால்
கொள்ளும் பயன் ஒன்றில்லாத
கொங்கை தன்னைக் கிழங்கோடும்
அள்ளிப் பறித்திட்டு அவன் மார்வில் எறிந்து
என் அழலை தீர்வேனே [13.8] [0634]

## 13 கண்ணன் என்னும்

கொம்மை முலைகள் இடர் தீரக்
  கோவிந்தற்கோர் குற்றேவல்
இம்மைப் பிறவி செய்யாதே
  இனிப் போய்ச் செய்யும் தவந்தான் என்
செம்மை உடைய திருமார்வில்
  சேர்த்தானேலும் ஒரு ஞான்று
மெய்ம்மை சொல்லி முகம் நோக்கி
  விடைதான் தருமேல் மிக நன்றே [13.9] [0635]

*அல்லல் விளைத்த பெருமானை*
  *ஆயர் பாடிக்கு அணி விளக்கை*
*வில்லி புதுவை நகர் நம்பி*
  *விட்டுசித்தன் வியன் கோதை*
*வில்லைத் தொலைத்த புருவத்தாள்*
  *வேட்கை உற்று மிகவிரும்பும்*
*சொல்லைத் துதிக்க வல்லார்கள்*
  *துன்பக் கடலுள் துவளாரே* [13.10] [0636]

# நாச்சியார் திருமொழி

## 14 பட்டி மேய்ந்து

***பட்டி மேய்ந்து ஓர் காரேறு***
***பல தேவற்கு ஓர் கீழ்க்கன்றாய்***
***இட்டீறு இட்டு விளையாடி***
***இங்கே போதக் கண்டீரே***
***இட்ட மான பசுக்களை***
***இனிது மறித்து நீர் ஊட்டி***
***விட்டுக் கொண்டு விளையாட***
***விருந்தா வனத்தே கண்டோமே*** [14.1] [0637]

அனுங்க என்னைப் பிரிவு செய்து
ஆயர் பாடி கவர்ந்துண்ணும்
குணுங்கு நாறிக் குட்டேற்றைக்
கோவர்தனனைக் கண்டீரே
கணங்களோடு மின் மேகம்
கலந்தாற் போல் வனமாலை
மினுங்க நின்று விளையாட
விருந்தா வனத்தே கண்டோமே [14.2] [0638]

மாலாய்ப் பிரந்த நம்பியை
மாலே செய்யும் மணாளனை
ஏலாப் பொய்கள் உரைப்பானை
இங்கே போதக் கண்டீரே
மேலால் பரந்த வெயில் காப்பான்
வினதை சிறுவன் சிறகென்னும்
மேலாப்பின் கீழ் வருவானை
விருந்தா வனத்தே கண்டோமே [14.3] [0639]

கார்த் தண் கமலக் கண் என்னும்
நெடுங்கயிறு படுத்தி
என்னை ஈர்த்துக் கொண்டு விளையாடும்
ஈசன் தன்னைக் கண்டீரே
போர்த்த முத்தின் குப்பாயப்
புகர் மால் யானைக் கன்றே போல்
வேர்த்து நின்று விளையாட
விருந்தா வனத்தே கண்டோமே [14.4] [0640]

# நாச்சியார் திருமொழி

## 14 பட்டி மேய்ந்து

*மாதவன் என் மணியினை*
*வலையில் பிழைத்த பன்றி போல்*
*ஏதும் ஒன்றும் கொளத் தாரா*
*ஈசன் தன்னைக் கண்டீரே*
*பீதக ஆடை உடை தாழப்*
*பெருங்கார் மேகக் கன்றே போல்*
*வீதி ஆர வருவானை*
*விருந்தா வனத்தே கண்டோமே* [14.5] [0641]

தருமம் அறியாக் குறும்பனை
தன் கைச் சார்ங்கம் அதுவே போல்
புருவ வட்டம் அழகிய
பொருத்தம் இலியைக் கண்டீரே
உருவு கரிதாய் முகம் செய்தாய்
உதயப் பருப்பதத்தின் மேல்
விரியும் கதிரே போல் வானை
விருந்தா வனத்தே கண்டோமே [14.6] [0642]

பொருத்தம் உடைய நம்பியைப்
புறம் போல் உள்ளும் கரியானை
கருத்தைப் பிழைத்து நின்ற
அக் கருமா முகிலைக் கண்டீரே
அருத்தித் தாரா கணங்களால்
ஆரப் பெருகு வானம் போல்
விருத்தம் பெரிதாய் வருவானை
விருந்தா வனத்தே கண்டோமே [14.7] [0643]

வெளிய சங்கு ஒன்று உடையானைப்
பீதக ஆடை உடையானை
அளி நங்கு உடைய திருமாலை
ஆழியானைக் கண்டீரே
களி வண்டு எங்கும் கலந்தாற் போல்
கமழ் பூங்குழல்கள் தடந்தோள் மேல்
மிளிர நின்று விளையாட
விருந்தா வனத்தே கண்டோமே [14.8] [0644]

# நாச்சியார் திருமொழி

## 14 பட்டி மேய்ந்து

*நாட்டைப் படை என்று அயன் முதலாத் தந்த*
*நளிர் மாமலர் உந்தி*
*வீட்டைப் பண்ணி விளையாடும்*
*விமலன் தன்னைக் கண்டீரே*
*காட்டை நாடித் தேனுகனும்*
*களிறும் புள்ளும் உடன் மடிய*
*வேட்டை ஆடி வருவானை*
*விருந்தா வனத்தே கண்டோமே* [14.9] [0645]

*பருந்தால் களிற்றுக்கு அருள் செய்த*
*பரமன் தன்னை பாரின்மேல்*
*விருந்தா வனத்தே கண்டமை*
*விட்டுசித்தன் கோதை சொல்*
*மருந்தாம் என்று தம் மனத்தே*
*வைத்துக் கொண்டு வாழ்வார்கள்*
*பெருன்தாள் உடைய பிரான் அடிக்கீழ்*
*பிரியாது என்றும் இருப்பாரே* [14.10] [0646]

# நாச்சியார் திருமொழி

## வாழித் திருநாமம்

கோதை பிறந்தவூர் கோவிந்தன் வாழுமூர்
சோதிமணிமாடம் தோன்றுமூர்
நீதியால் நல்ல பத்தர் வாழும் ஊர் நான்மறைகள் ஓதுமூர்
வில்லிபுத்தூர் வேதக் கோனூர்
பாதகங்கள் தீர்க்கும் பரமனடி காட்டும்
வேதமனைத்துக்கும் வித்தாகும்
கோதை தமிழ் ஐயைன்தும் ஐன்தும்
அறியாத மானிடரைவையம் சுமப்பது வம்பு

திருவாடிப் பூரத்து செகத்துதித்தாள் வாழியே
திருப்பாவை முப்பதும் செப்பினாள் வாழியே
பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்பிள்ளை வாழியே
பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னானாள் வாழியே
ஒரு நூற்று நாற்பத்து மூன்றுரைத்தாள் வாழியே
உயரரங்கற்கே கண்ணி யுகந்தளிதாள் வாழியே
மருவாரும் திருமல்லி வள நாடி வாழியே
வண்புதுவை நகர்க் கோதை மலர்ப் பதஙள் வாழியே